KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.66

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கம்பர் காட்டும் உறவு மேலாண்மை (இராமன் – கைகேயி - தயரதன்)

Relationship Management as Portrayed by Kamban (Rama – Kaikeyi – Dasharatha)

மகேஸ்வரிவீரப்பன்[1,*], முனைவர் பெரி.அழகம்மை[2]

[1] பகுதிநேர முனைவர்பட்டஆய்வாளர், (Ref.No.16781/Ph.D.K8/Tamil/Part Time/Jan'2019/ Confirmation Date:12.08.2022) கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம், (இணைவு: பாரதிதாசன் பல்கலைக் கழகம்)

[2] நெறியாளர், உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை கணேசர் கலை அறிவியல் கல்லூரி மேலைச்சிவபுரி.புதுக்கோட்டை மாவட்டம், (இணைவு: பாரதிதாசன் பல்கலைக் கழகம்)

***Corresponding author:** மகேஸ்வரிவீரப்பன், mahevadivel@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 2 November 2026
Accepted: 10 November 2026

Article ID
KIJTS-2026-0003

Peer review
Double-blind peer review

Keywords
Relationships
Kamban
Mother
Kaikeyi
Father
Dasharatha
Son
Rama

ABSTRACT

In society, people naturally interact with one another for various reasons. These connections can be categorized into those formed by birth and those formed by friendship. Connections by birth arise from blood relations, including mothers, fathers, elder brothers, younger brothers, elder sisters, and younger sisters. As one journeys through life, there are also relationships formed through friendship. Today, it has become a common world trend to neglect relationships and forget their sanctity. Literature serves as a tool to pave a new path to correct this trend. In particular, the Kambaramayanam emphasizes the management of diverse relationships to streamline and regulate one's way of life.

How to cite this article: மகேஸ்வரிவீரப்பன், & முனைவர் பெரி.அழகம்மை (2026). கம்பர் காட்டும் உறவு மேலாண்மை (இராமன் – கைகேயி - தயரதன்). *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 758. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.66
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை

இலக்கியம் மனிதனுக்கு இன்பம் பயப்பதுடன் நன்னெறி காட்டி உய்விக்கும் திறனும் படைத்தது. நன்னெறியை நம் உள்ளத்தில் பதிய வைக்க சிறந்த வழி இலட்சிய

வாழ்க்கை வாழ்ந்த பாத்திரங்களைப் படைத்துக்காட்டுவதே. இவ்வுலகம் பொருள் சேர்க்கும் இடம் அல்ல. உறவுகளைப் பெருக்கி இன்பமாக வாழத்தூண்டும் களம் என்பதையே கம்பராமாயணம் தெளிவுறுத்துகிறது. கம்பர் தம் காப்பியத்தில் இக்கருத்துகளைப; பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். கம்பராமாயணத்தில் இராமரிடம் அன்பு கொண்ட பாத்திரங்கள் மிகுதியானவை. அதில் பிறப்பால் வரும் உறவுகளான தாய், தந்தை, தம்பியரின் உறவுகள் முதன்மை பெறுகின்றன. ஆனால் கைகேயி என்ற சிற்றன்னையின் உறவும் தயரதரான தந்தையின் உறவும் இராமர் உறவில் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு அவர்களின் வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. அதில் பெற்றோரிடம் இராமன் கொண்ட மகன் உறவு மேலாண்மை கட்டுரைப் பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

உறவுகள் மேலாண்மை

மேலாண்மை என்ற சொல்லிற்குப் பிறரைக் கட்டுப்படுத்தக் கூடிய பலம், மேலோங்கிய நிலை[1] என்ற பொருள்களை தருகிறது அகராதி. இங்கு, உறவுகள் மேலாண்மை என்பது உறவுகளிடம் கையாண்ட மேலோங்கிய குணநலன் என்பதாக் கொள்ளலாம். அவ்வகையில் காப்பியத்தில் பெற்றோர்களின் மீது இராமன் கொண்ட அன்புநிலை, இக்கட்டான சூழலில் நடந்து கொண்ட முறை, ஆகியவை சிறப்பிடம் பெறுகின்றன.

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்

மிகநாடி மிக்கக் கொளல்[2]

என்கிறது குறள். ஒருவருடைய குணம் குற்றம் இரண்டையும் ஆராய்ந்து அதில் எது மிகுதியாக உள்ளதோ அதைப்பொறுத்து அவரின் தன்மையை முடிவு செய்து அவரை அணுக வேண்டும் என்பது இதன் பொருள். உறவுகள் மேலாண்மைக்கு திருவள்ளுவர் காட்டும் வழிகாட்டுதல்தான் இது. எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லோரும் நல்லவர்களாக இருக்க முடியாது. ஆனால் அவர்கள் செய்யும் சிறுதவறைப் பெரிது படுத்தாமல் வாழ்ந்தால் இன்பமாக வாழலாம். இதையேதான் குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்ற முதுமொழியும் நமக்கு உணர்த்துகிறது.

இராமன்

“கதாபாத்திரப் படைப்பில், கம்பன் உலகின் மிகச்சிறந்த கவிஞர்களுக்கு இணையான நிலையில் திகழ்கிறார். அவர் கதாபாத்திரங்களை மிக உறுதியான கைவண்ணத்துடன் செதுக்கியுள்ளார்; அவை எவ்வளவு துல்லியமாகவும் முழுமையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனவென்றால், ஒரு தனி வாக்கியத்தைக் கொண்டோ, அல்லது ஒரு உரையாடலில் இடம்பெறும் ஒரு சிறு சொற்றொடரைக் கொண்டோ, பேசும் நபர் யார் என்பதை எவ்வித ஐயமுமின்றி அடையாளம் கண்டுவிட முடியும்.

இராமாயணக் கதாபாத்திரங்களின் அடிப்படை வடிவமைப்பை வால்மீகிதான் உருவாக்கினார் என்பது உண்மைதான். ஆனால், கம்பனின் கைகளில் அவை இன்னும்

பிரம்மாண்டமான பரிமாணத்தைப் பெறுகின்றன. வால்மீகியின் காவியத்தை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு, அதில் வரும் இராமன், பரதன், இராவணன், கும்பகர்ணன், வாலி, அனுமன், சீதை, கௌசல்யா போன்ற கதாபாத்திரங்களை இன்னும் மேம்படுத்த முடியுமா என்ற வியப்பு ஏற்படலாம். இருப்பினும், கம்பனின் நாயகர்களும் நாயகிகளும் வால்மீகியின் கதாபாத்திரங்களை விடவும் மிக உயர்ந்த நிலையில் படைக்கப்பட்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை"[3] என்பர்.

அவ்வகையில், "இராமனது வடிவழகு குண அழகு ஆற்றல் அழகு இம்மூன்றையும் அவனது திவ்விய சரிதத்தில் வைத்து விளக்குவதே இராமாயணம்"[4]. இராமன் என்னும் சொல் மகிழ்ப்பவன் என்றும் அழகன் என்றும் பொருள்படும்[5]அவ்வகையில் உலகங்களையெல்லாம் தன் செயலால் மகிழச் செய்தவன் (இரக்கமிக்கச் செய்பவன்) இராமன்[6] எனப்பட்டான். பெயருக்கு ஏற்றவகையில் இராமனின் பண்புநலன் மிளிர்ந்த இடம் பெற்றோரிடம் கொண்ட உறவு லோண்மையே ஆகும். தசதரன் எடுத்த ஓர் அரசியல் முடிவும் அதனால் விளைந்த சிக்கல்களும் அந்த முடிவினை இராமன் ஏற்றுக்கொண்ட பாங்கும் உறவுகள் மேலாண்மைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன[7].

கைகேயி - இராமன்

இராமரின் வளர்ப்புத் தாய் கைகேயி. சிற்றன்னை என்ற உறவுக்கு உரியவள். வளர்ப்புத் தாய் என்ற புகழ்மொழிக்கு உரியவள். இராமன் கோசலையிடம் வளரவில்லை என்பதும் கைகேயிதான் இராமரை வளர்த்தவள் என்பதை

'தாய் கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்

கேகயன் மடந்தை'

(அயோத்தியா.கா.கைகேயி சூழ்ச்சிப்படலம் – 101)

என்று பொதுமக்கள் கூற்றாக வெளிப்படுத்துகிறார் கம்பர். வளர்த்த சிற்றன்னையே தன் கணவனான தயரதனிடம் இரண்டு வரங்கள் கேட்கிறாள். ஒன்று தன் மகன் பரதன் நாடாள வேண்டும். மற்றொன்று இராமன் காடாள வேண்டும் என்பதே. இவ்வரங்களைப் பெற்றபின் கைகேயி இராமரை அழைக்கிறாள். தன் எதிரே வந்த தன் சிற்றன்னையாகிய கைகேயியை, தலை நிலத்தில் படும்படி, கீழே விழுந்து வணங்கி நின்றதையும் தன் வாயினைத் தன்னுடைய ஒரு கையினால் புதைத்து, மற்றொரு கையினால் ஆடையை மடக்கிக்கொண்டு பணிவுடன் நின்றதையும்,

வந்தவள் தன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்

சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையில் புதைத்து, மற்றைச்

சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்-

அந்திவந்து அடைந்த தாயைக் கண்டஆன் கன்றின் அன்னான்.

(அயோத்தியா.கா.கைகேயி சூழ்வினைப் படலம்-108)

எனக் காட்டுகிறார் கம்பர். உயர்ந்தோர் முன் இருக்கும்பொழுது பணிந்த மொழிகள் தணிந்ததடை, ஆடையை மடக்கிக்கொள்ளுதல், வாய் புதைத்தல் ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும் என்பது மரபு. இதனைத் தான் இராமர் இங்கு செய்து மற்றவர்க்கு வழி காட்டியாக அமைந்துவிடுகிறார். பதினான்கு ஆண்டுகள் காடேக வேண்டும் பரதனே நாடாள வேண்டும் என்று கைகேயி கூறியதைக் கேட்டு இராமன் வருந்தவில்லை; மனம் கலங்கவில்லை. அவன் முகத்தின் பொலிவு. அப்பொழுது அலர்ந்த செந்தாமரையின் அழகினை வென்று விட்டதாக, கம்பர் இராமனின் குணநலனைக் காண்பித்து மனநிலையை. வருணித்து விடுகிறார். மேலும் தாயிடம்,

மன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்ப னோ?

என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ?

என்னிதின் உறுதி அப்பால் ? இப்பணி தலைமேற் கொண்டேன்;

மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும்கொண்டேன்.

(அயோத்தியா.கா.கைகேயி சூழ்வினைப் படலம் - 114)

மன்னவன் கட்டளை இல்லையென்றாலும் தங்களின் கட்டளையை மறுப்பேனோ நிச்சயம் ஏற்பேன். என் தம்பி பரதன் பெற்ற அரசசெல்வம் நான் பெற்றதைப் போன்றது ஆகும் என்று கூறி அன்னையின் ஆணையைத் தலைமேல் கொண்டான் இராமன். காடேக வரம் கேட்ட கைகேகியை எதிர்க்கத் துணிந்த இலக்குமனிடம் இராமன் அவனைச் சமாதானப்படுத்தும் காட்சியில் தாய் தந்தையர் தமக்கு பிடிக்காத ஒன்றை செய்விட்டனர் என்றால் அவர்கள்மீது சினம் கொள்ளக்கூடாது என்று தடுக்கின்றார்.

நதியின் பிழைஅன்று நறும்புனல் இன்மை; அற்றே

பதியின் பிழை அன்று! பயந்து நமைப்பு ரந்தாள்

மதியின் பிழை அன்று! மகன்பிழை அன்று! மைந்த!

விதியின் பிழை! நீ இதற்கென்னை வெகுண்டது? என்றான்.

(அயோத்தியா.கா.நகர் நீங்கு படலம் -73)

நல்ல தண்ணீர் இல்லாமலிருத்தல் நதியினுடைய பிழை அல்ல. அதே மாதிரிதான். தந்தையின் குற்றமல்ல; நம்மை வளர்த்தத் தாயான கைகேயின் குற்றமன்று; சிறந்தவனாகிய பரதனின் பிழையுமல்ல. விதியினது குற்றமாகும் நதியில் தூய்மையான நீர் வருவதே இயல்பு. அது கலங்கியோ அசுத்தங் கலந்தோ வருகிறதென்றால் அது நதியினது பிழையா இல்லை இடையிலே திரிவுபட்டிருக்கிற தென்று உணரவேண்டும். விதிதான் இப்படி விளையாடுகிறது என்பதைத் தவிர இதில் யாருடைய குற்றங் கிடையாதென்று கூறுகிற மனப் பண்பு கொண்ட இராமரைக் காட்டி உறவு மேலாண்மைக்கு மணிமகுடம் சூட்டிவிடுகிறார் கம்பர். மேலும்,

ஆய்தந்து அவன் அவ்வுரை கூறலும் "ஐய! நின்றன்

வாய்தந்தன கூறுதி யோஇமறை தந்த நாவால்?

சான்றோர் புகல்நல் தனித்தாதையை வாகை கொண்டோ?

ஈன்றாளை வென்றோ இனி இக்கதம் தீர்வது ?" என்றான்.

(அயோத்தியா.கா.நகர் நீங்கு படலம்-138)

உடன் பிறந்தவனை வென்றபின்போ, சான்றோர்கள் போற்றுகின்ற நற்செயல்களைச் செய்யும் தந்தையை வெற்றி வாகைசூடியோ, பெற்ற தாயைச் செயித்தோ கோபத்தை நீக்கப் போகிறாய் என்று இராமர் இலக்குவனுக்குக் கூறும் அறிவுரை இன்றைய தலைமுறைக்கும் சாலப்பொருந்துவனவாக இருக்கின்றது. தனக்குப் பிடிக்காத ஒன்றை தாய் தந்தை செய்தாலும் அவர்கள் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். சினத்தால் தாக்கப்படக்கூடியவர்கள் இல்லை என்பதை கம்பர்காட்டும் திறம் போற்றுதலுக்குரியது.

காவியத்தின் இறுதியில் சிவபெருமான் ஏவலால் மண்ணுலகுக்கு வரும் தயரதனிடம் "தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (6.37.128) என்று, இரு வரங்கள் வேண்டிப் பெற்ற தன்மையைக்காட்டி இராமனின் குணநலனிற்குக் கம்பர் மணிமகுடம் சூட்டிவிடுகின்றார்.

இவ்வுலகில் விலங்குப்பண்பு-மக்கட் பண்பு-தெய்வப்பண்பு மூன்றும் விரவியுள. மக்களிலேதான் விலங்குகளும் காணப் படுகின்றனர்; தெய்வங்களும் காணப்படுகின்றனர். ஒரே மனிதனிடம் விலங்குப் பண்பும் ஒருபோது வெளிப்படுகிறது; தெய்வப்பண்பும் சிலபோது வெளிப்படுகிறது[8] என்ற வகையில் கைகேயியின் உறவு அமைந்துவிடுகிறது. பதினான்கு ஆண்டுகள் வனவாசம் என்று கைகேயி கேட்ட ஒரு வரம் சூறாவளியாய் மாறி இராமரின் வாழ்க்கைக் களத்தை மாற்றுகிறது. ஒரு குடும்ப உணர்வுகளைச் சிதைத்துவிடுகிறது. உறவுகளுக்குள் பல பாசப்பிரிவினைகளை ஏற்படுத்திவிடுகிறது. ஆயினும் இன்பம், துன்பம் என்ற; எச்சூழலிலும் "அன்னையையும் தந்தையையும் கண்கண்ட தெய்வங்களாகக் கொள்ளவேண்டும்" என்பதேகைகேயி - இராமன் கொண்ட உறவு மேலாண்மை ஆகும்.

தயரதர் - இராமன்

ஐங்குரவர் எனச் சிறப்பிக்கப் பெறுபவரில் ஒருவர் தந்தை. தந்தையர் ஐவர். அவர்கள் பிறப்பித்தோன், கற்பித்தோன், மண முடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன் என்பவர்கள். இவர்களுள் ஆதித்தந்தை பிறப்பித்தோனே. தந்தை என்ற சொல்லுக்கு முந்திய உரிமையுடையவன் அவனே ; தனிப்பேருரிமை யுடையவன் அவனே; தகு அப்பன் என விரித்துரைத்தற்கான தகை சான்ற தகப்பன் என்ற சொல்லால் குறிக்கப் பெறுபவனும் அவனே"[9] என்பர்.

குடும்ப வாழ்க்கையில் தந்தை மகன் உறவு ஒரு தனி இடம் பெறுகின்றது. மக்களைப் பெற்று வாழும் வாழ்க்கை மாண்புமிக்க வாழ்க்கை அதிலும் ஆண் மக்களைப்பெற்று வாழ்வது மிகப்பெருஞ் சிறப்புடையது. இவ்வாறு எண்ணி மகிழும் நிலை இன்றைக்கும் உள்ளது.

துன்பத்தினின்று நீங்கினவர்கள் இவ்வுலகினை ஆளும் அரசர்களும் அல்லர்; விண்ணவர் மன்னனான இந்திரனும் அல்லன்; உயர்ந்த தவத்தைத் தொடங்கி நோன்புகளையும் வேள்விகளையும் இயற்றியவர்களும் அல்லர்; தந்தை சொல் மறுக்காத தனையனைப் பெற்றவரே துன்பத்தினின்று நீங்கினவர்கள் ஆவார்கள் என்பது கம்பர் காட்டும் தந்தை- மகன் உறவு ஆகும்.

மன்னர் வானவர் அல்லர்மேல் வானவர்க்கு அரசாம்

பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் அல்லர்;

பின்னும் மாதவம் தொடங்கிநோன்பு இழைத்தவர் பிறரார்

சொல்ம றாமகன் பெற்றவர் அருந்துயர் துறந்தார்.

(அயோத்தியா.கா.மந்திரப் படலம் 70)

என்பது கம்பர் வாக்கு. இவ்வகையில் தயரதன் பெற்ற மைந்தர் நால்வர். அவர்களுள் தலைமகன் இராமர். தயரதருக்கு உயிர் மகன். தயரதன் நரைமுடி ஒன்றைக் கண்டு, தனக்கு வயதாகி விட்டது எனக் கருதி, தயரதன் இரண்டு செயல்களைச் செய்யப் போவதாய் அறிவித்தான். முதலாவது இராமனுக்கு அரசை நல்குதல். இரண்டாவது தான் துறவு பூண்டு காடு சென்று தவமியற்றுதல். இவற்றை மிகத் தெளிவாக அம் மன்னவன்,

"ஆதலால் இராமனுக்கு அரசை நல்கிஇப்

பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்

மாதவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்

யாதுநும் கருத்துான இனிது கூறினான்" (அயோத்தியா.கா.மந்திரப் படலம்.31)

என்ற பாடல்மூலம் வெளியிடுகிறான். அரசு என்னும் துன்பத்திலிருந்துத் தன்னைக் காக்க வேண்டும் என்ற தயரதர் வேண்டுகோளுக்கு ஏற்பவே மகன் ஆற்ற வேண்டிய கடமையாக இராமர் முடிசூட ஒப்புக் கொள்கிறார். தான் இந்த அரசியல் துன்பத்தில் மூழ்கி இருந்தால் இராமரை மகனாகப் பெற்றதன் பயன் நிறைவடையாது என்று கூறும் தயரதர் வாக்கைக் காட்டுகிறார் கம்பர். இதனை.

முன்னை ஊழ்வினைப் பயத்தினும் முற்றிய வேள்விப்

பின்னை எய்திய நலத்தினும் அரிதினில் பெற்றேன்;

இன்னம் யான் இந்த அரசியல் இடும்பையில் நின்றால்

நின்னை ஈன்றுள பயத்தினின் நிரம்புவது யாதோ?

(அயோத்தியா.கா.மந்திரப் படலம்-67)

என்பதால் அறியலாம்.

"உலகவாழ்வில் தீவினையோடு நல்வினை போராடுகிறது. இதன் காட்சி பொருளான வெளிப்பாடே நடை முறை வாழ்க்கை"[10] என்பதற்கேற்ப அன்பு மனைவியான கைகேயிக்கு இரண்டு வரங்கள் அளிக்க வேண்டிய கட்டாயச் சூழலுக்குள் தயரதர் அமிழ்ந்து போகிறார். சம்பராசுரப் போரில் அந்தப் போர்க்களத்திலேயே, தன் வெற்றிக்குக் காரணமாக இருந்த கைகேயியிக்கு அளித்த வாக்கின்படி இராமர் காடேக வேண்டும் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே

எறிந்தன கடியசொல் செவியுள் எய்தலும்

நெறிந்து அலர் குஞ்சியான் நெடிது வீழ்ந்தனன்;

அறிந்திலன்; உயிர்த்திலன்; அசனி ஏற்றினால்

மறிந்துஉயர் மராமரம் மண்உற்று என்னவே. 26

(அயோத்தியா.கா.கைகேசி சூழ்வினைப் படலம் – 26)

என்று தயரதன் அடைந்த துன்ப மிகுதியைக் காட்டுகிறார் கம்பர். கைகேயி சொன்ன கடுமையான சொற்கள் செவியினுள்ளே புகுந்தவுடன் பெரிய மரமானது பேரிடியினால் தலைமடிந்து மண்ணில் விழுந்ததுபோல் விறைத்துப்போய்க் கீழே விழுந்து,

"கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன்என்

உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனது அன்றோ?

பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்

மண்ணே கொள்நீ மற்றையது ஒன்று மறஎன்றான்"

(அயோத்தியா.கா.கைகேசி சூழ்வினைப் படலம்- 28)

"என் மகன் என் கண்; என் உயிர் எல்லா உயிர்கட்கும் நன்மகன் காடு செல்ல வேண்டாம் என்ற வரம் நல்கு" என இரந்து மனைவியிடம் மண்டியிட்டு மன்றாடுகின்றார். பயனில்லை தன் மகனுக்கு நல்லது செய்ய இயலவில்லை. தான் கொடுத்த வரங்களே தனக்குக் கூற்றாகின்றன என்பதை உணர்ந்த தயரதர் மகற்காற்றும் உதவியை நிறைவேற்ற இயலாது தன் உயிரையே நீத்துத் தனக்கு வந்த பழியையும் நீக்கிக் கொள்ளுகின்றார். வாழும்போது தந்தைக்குப் பழி ஏற்படாமல் இருக்க உதவிய செயல்தான் இராமன் வனவாசத்தை ஏற்றுக்கொண்டான். இராமனுக்குரிய ஒரு சொல் ஓர் இல் ஒரு வில் என்பனவற்றுள் ஒரு சொல் என்பது தசரதன் பிறப்புரிமையாக இராமனுக்கு வந்தது என்பார் அமுதன். இம்முறையின்வழியே இராமன் செயல்பட்டதை, ஏற்றுக்கொண்டான். இதனையே,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்

காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்

வேத முதல்வற் பயந்தோ னென்பது

நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ!"[11]

என்று சிலம்பும் பேசும். வனத்தில் தான் மனைவியைப் பிரிந்து துன்பம் அடைந்தபோதிலும் தந்தையின் வாக்கைக் காப்பாற்றி விடுகிறான். இதனால் தயரதர் அடைந்த நன்மை தயரதர் நரகத்தில் வீழ்ந்துவிடாமல் இருந்தான். இப்பெருமையை தயரதனே கூறும்வண்ணம் கம்பர் காட்டியுள்ளார்.

இலங்கையில் இராவணனை வென்ற பிறகு இராமனைத் தரிசிக்கத் தசரதச் சக்கரவர்த்தி விண்ணுலகில் இருந்து இறங்கி வருகிறார். அப்போது தயரதன் தன் மகனின் பெருமையைப் போற்றி,

'மைந்தரைப் பெற்று வான் உயர் தோற்றத்து மலர்ந்தார்

சுந்தரப் பெருந் தோளினாய்! என் துணைத் தாளின்

பைந் துகள்களும் ஒக்கிலர் ஆம் எனப் படைத்தாய்;

உய்ந்தவர்க்கு அருந் துறக்கமும் புகழும் பெற்று உயர்ந்தேன்.

(யுத்த கா.மீட்சிப்படலம் – 118)

என்று கூறுகிறார். இவ்வுலகில் தங்களுக்குப் புத்திரர்களைப் பெற்று, அதனால் வான் உலகளவுக்கு உயர்ந்த பெருமையோடும் புகழோடும் விளங்கிய பெருமக்கள் பலர் உண்டு. அந்தப் பெற்றோர் யாவரும், என்னுடைய இரண்டு பாதங்களின் கீழ் உள்ள தூசுக்குக்கூட ஈடாக மாட்டார்கள் என்கிற அளவுக்கு என்னை உயர்த்திவிட்டாய். உன்னை மகனாகப் பெற்றதால், பிறவிப் பிணியிலிருந்து உய்வடைந்தவர்களுக்குக் கிடைக்கும் அரிய முக்தி உலகத்தையும் அழியாத பெரும் புகழையும் பெற்று நான் எல்லோரையும் விட உயர்ந்துவிட்டேன் என்கிறார்.

இராமனுக்குரிய ஒரு சொல், ஓர் இல், ஒரு வில் என்பனவற்றுள் ஒரு சொல் என்பது தசரதன் பிறப்புரிமையாக இராமனுக்கு வந்தது என்பார்[13] அமுதன் இராமன் தந்தையின் வாக்கை நிறைவேற்றியமையே சிறந்த மகன் உறவாக அமைகிறது. தந்தை மகன் உறவில் சுயநலம் என்பதற்கே இடமில்லை. தந்தை எவ்வகையானும் நல்லதையே விரும்புவார். செய்வார் என்ற நம்பிக்கையில் காடு செல் என்றதைக் கேட்டும் மகிழ்ந்தார். அவர் முகமலர்ச்சி அன்றலர்ந்த செந்தாமரையை வென்றது. தசரதர் இராமர் இவ்விரு வரையும் பின்னிப் பிணைத்திருந்திருந்த அன்பு தனிப் பேரன்பாகும்.

மகன்மை நெறி

நாம் சமுதாயத்தில் வாழ்கின்றோம். குடும்பம் தனிச் சிறப்புடைய சமூகம். சமூகங்களுக்கெல்லாம் முன்னோடியான சமூகம். தலையாய சமூகம். அச்சாணி

போன்ற சமூகம். அதன் அறவாழ்வு சமுதாய நல்லுறவுக்கு ஆதரவான அறவாழ்வு. சிதம்பர மும்மணிக் கோவை என்னும் நூலிலே குடும்பத்திலே அறம் மிளிர்தல் அழகுறச் சித்தரிக்கப் பெறுகின்றது.

நல்லற நூல்களில் சொல்லறம் பலசில

இல்லறம் துறவறம் எனச்சிறந் தனவே

அந்நிலை இரண்டினுள் முன்னது கிளப்பின்

கற்றநூல் துறைபோய்க் கடிமனைக் கிழவன்

நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியொடு

அன்பும் அருளும் தாங்கி இன்சொலின்

விருந்து புறந்தந்து அருந்தவர்ப் பேணி

நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறீஇ

வரையோ நாளின் மகப்பேறு குறித்துப்

பெருநலம் துய்க்கும் பெற்றித் தன்றே.

என்கிறது சிதம்பர மும்மணிக்கோவை அறநூல்களிலே அறங்கள் பல சொல்லப் பெறுகின்றன. அவற்றுள் சிறந்தவை இல்லறமும் துறவறமும். இல்லறத் தலைவன் கற்றுத் துறைபோய வகை கல்வியால் அறிவும் அறிவினால் ஒழுக்கம் பெற்ற குணசீலனாக இயங்குவான். அவனுடைய மனையாளும் நற்குணம் நிறைந்த கற்புடைச் செல்வி. இவர்க ளிருவரும் அன்புடையவர்களாக அருளுடையவர்களாக இன்சொல் இயம்புபவர்களாக வாழ்வு நடத்துவர் விருந்து உபசரிப்பர். தவமுனிவர்களைப் பேணுவர். மனையறத்தால் மாண்புமிகு புகழ் நிலைக்கப் பெறுவர். மகப்பேறு குறித்த வாழ்க்கை இன்பம் திளைப்பர். மகப்பேற்றில் தந்தைக்கு மகன்மை முறையுடையான் மகன். மகன் என்ற ஆண்பால் ஒருமைக்குப் பலர்பால் மகர் எனவும் மகார் எனவும் இலக்கிய வழக்காய் வருவதைக் காண்கிறோம்.

மகனைப் புத்திரன் என்பர். புத்திரன் என்பதற்குப் புத்தென்னும் நரகத்தில் விழாமல் கரையேற்றுபவன் என்று பொருள். இதனாலேயே வள்ளுவர்,

"தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்

தந்தம் வினையால் வரும்"[14]

எனக் கூறியுள்ளார். புதல்வர்களைப் பெற்றவர்கள் 'மலடர் அல்லர். புதல்வரைப் பெற்றவர்' என்ற உலகத்தாரால் சொல்லப்படுகின்ற ஒரு பயனை மட்டுமா பெறுகின்றார்கள். புதல்வர்கள் பெற்றோர்களை 'புத்' என்ற நரகத்தில் சேரவிடாது நல்லுலகத்தில் சேருமாறு செய்வர்; மேலும் பெற்றோர் உயிர்களைப் பாதுகாப்பர். எனவே மக்களைப் பெற்ற மாந்தர்களுக்குத் தீங்கு என்பது எதுவும் வாராது.

"நால்வர் பெருமக்களைத் தயரதன் தவம் செய்து பெற்றதனால் அவன் 'புத்' என்னும் நரகம் சேராது நல்லுலகே அடைவார் என்றபோதிலும் இராமர் தந்தைசொல் மீறாமல் தந்தையின் வாக்கை நிறைவேற்றியமையே சிறந்த மகன் உறவாக அமைகிறது.

நோயால் மாந்தர் இறப்பது உலக இயற்கை. போர் முனையில் வீர மரணம் அடைதல் வேந்தர்க்குப் பெரும்புகழ். இவ்விரண்டிலும் அல்லாமல் மகனைப் பிரிந்த காரணத்தால் தயரதருக்கு மரணம் நேர்ந்தது என்பது தான் காப்பியம் காட்டும் பெருவருத்தம்.

ஒன்றோ நல்நாட்டு உய்க்குவர்; இந்நாட்டு உயிர்காப்பார்

அன்றே ? மக்கள் பெற்றுஉயிர் வாழ்வார்க்கு அவம்உண்டே?

இன்றே வந்துஇஈண்டு 'அஞ்சல்' எனாதுஎம். மகன் என்பான்

கொன்றான் அன்றே தந்தையை?" என்றாள் குலைகின்றாள்.

(தைலமாட்டுப் படலம்- 65)

என்று கோசலை இரங்கிக் கூறுவதாகக் கம்பர் காட்டுகிறார். புத்திரன் பெற்றோரைக் காக்க வேண்டிய கடமையை மட்டுமல்ல அவர்கள் இறந்தபின்னும் ஆற்ற வேண்டிய கடமை ஒன்று உள்ளது என்பதையும் இராமப் பாத்திரத்தின்வழி கம்பர் காட்டுகிறார். தயரதர் இறப்பிற்குப் பின் இராமன் செய்த நீர்க்கடனைக் காப்பியத்தில் காட்டியுள்ளார்.

“மனித வாழ்வு பிறந்தது முதல் இறப்பது வரையில்தான் உண்டு எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், நமது இந்துமதம் மனிதன் பிறப்பதற்கு முன்பும், பிறந்து வாழும்பொழுதும், இறந்தபின்பும் அவ்வாழ்வு உண்டென வலியுறுத்தி அதற்குரிய கிரியைகளையும் வகுத்துள்ளது என்பர். மேலும், சிரத்தையுடன் செய்யப்படுவது சிராத்தமாகும். பிதுர்க்கள் இறந்த நாளில் அவர்களின் மேல்கதிக்காக சந்ததிகள் சிரத்தையுடன் செய்யும் கிரியையாகும். இறந்த நாளேயன்றி அமாவாசை, வருடப்பிறப்பு முதலிய நாட்களிலும், சிறந்த தீர்த்தம், கோவில் உள்ள இடங்களிலும் இது செய்யவேண்டும் என்பர். அக்கிரியைகளை தவறாது ஒவ்வொரு இந்துவும் கைக் கொண்டு ஒழுகித் தாங்களும் கடைத்தேறி, தங்கள் முன்னோர்களையும் கடைத்தேற்ற வேண்டும் என்பதை சடங்கு முறைகள் இனிது விளக்குகின்றன”[15].

புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்

தக்க நல் மறையவன் சடங்கு காட்ட தான்

முக் கையின் நீர் விதி முறையின் ஈந்தனன் -

ஒக்க நின்று உயிர்தொறும் உணர்வு நல்குவான்.

(திருவடி சூட்டு படலம் -)

இப்பாடல், இராமன் தன் தந்தை தசரதனின் மறைவுக்காக ஆற்றிய நீர்க்கடனை (தருப்பணம்) விவரிக்கிறது. நதிநீரில் நீராடி, வசிட்ட முனிவர்; செய்ய வேண்டிய அந்தியக் கிரியைகளை (சடங்குகளை) வழிநடத்த, இராமன் தன் கைகளால் மூன்று

முறை நீரை அள்ளி சாத்திர முறைப்படி பிதுர்க்கடனாக அளித்தான்; இந்நீர்க்கடனை செய்யும் இராமனை உலகிலுள்ள எல்லா உயிர்களுக்குத் தேவையா அறிவையும் உணர்வையும் அருளும் இராமன் என்றே கம்பர் குறிப்பிடுகிறார். உயிர்களுக்கு வழங்கும் அறிவு என்பது தந்தையின் மறைவிற்கு மகன் செய்ய வேண்டிய கடமைகள் இவை என்பதையே இவ்விடம் புலப்படுத்துகிறது. நமது அடுத்த தலைமுறைக்கு நாம் கற்பிக்க விரும்பும் பல மதிப்புகளை மகா இதிகாசமான இராமாயணம் போதிக்கிறது என்பதையும் உணர முடிகிறது.

முடிவுரை

இராமயாணக்கதை இராவணின் காமக் கடல் என்றும் போர்த்தொடுக்கும் களம் என்று பார்க்காமல் உறவுகளைப் பேணிய காவியம் என்றே உணரலாம். தந்தையர் தள்ளாத வயதுவரத் வரைத் தாங்குங் கோலாய் வலிமையுடன் அவனை ஆதரித்துத் தாங்குபவன் மைந்தன். இவ்வகையில் இராமன் தள்ளாத வயது வரையில் தந்தையைத் தாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படவில்லை. மாறாக தந்தைக்குப் பழி ஏற்படாமல் அவர் அளித்த வரத்தை மதித்து வனவாசம் செய்ய வேண்டிய சூழல் ஏற்படுகிறது. அதனையே தன் அகமுவந்து ஏற்று தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்ற முதுமொழிக்கு ஏற்பவும் பெற்றோர்சொல் மறுக்காத மகனாகவும் இருப்பதைக் கம்பர் காட்டி காப்பியத்திற்கும் மகன் என்ற உறவிற்கும் பெருமை சேர்த்துவிடுகிறார்எந்த அளவில் குடும்ப வாழ்க்கை பழுதில்லாமல் காப்பாற்றப் பெறுகின்றதோ அந்த அளவில் தாய் தந்தை மகன் நல்லுறவும் இனிய உறவாகத் தழைப்பதில் தடை யில்லை என்பதையும் கைகேயி-தயரதன்-இராமன் உறவுகள் நமக்கு வெளிப்படுத்திவிடுகின்றன.

சான்றெண்கள்

1. க்ரியா தமிழ் தமிழ் அகராதி ப.. 173
2. குறள்- 504.
3. AIYYAR V.V.S, KAMBA RAMAYANAM A STUDY, P. 46.

In the delineation of character, Kamban stands on a level with the greatest poets of the world. The lines are drawn with a firm hand, and the characters are painted with such accuracy and fullness that from any single sentence, and sometimes even from a single phrase in a speech, one can tell the person speaking without any the least doubt.

Here too, naturally, Valmiki has set the stamp on the characters of the Ramayana. But in Kamban's hand they have become much more grand. The student of Valmiki will wonder how his Rama and Bharata, Ravana and Kumbhakarna, Vali and Hanuman, Sita and Kausalya and the rest could be improved. The fact, however, is there that Kamban's heroes and heroines are beings of a decidedly higher stature than those of Valmiki.

1. எஸ். வையாபுரிபிள்ளை, தமிழர் பண்பாடு, ப. 159.
2. Sir Monier Williams, A Sanskrit – English Dictionary (Ed), P.877
3. அமுதன், கம்பர் காட்டும் வைணவப் பேருலகம், ப.141
4. அ.அ. மணவாளன், இராமகாதையும் இராமாயணங்களும் தொகுதி - 1, ப.206 .தென்னக ஆய்வுமையம் சென்னை - 14 முதற்பதிப்பு - 2005.

5. இரா. வ. கமலக்கண்ணன், உலகப் பெருங் கவிஞர் கம்பர், ப-64.
6. ரம்போலா மாஸ்கரேனஸ், ஆராய்ச்சிக் கட்டுரைகள், ப. 13.
7. தமிழண்ணல், கம்ப நாடகம், ப.48.
8. சிலப்பதிகாரம், ஊர்காண் காதை : 46-49
9. காப்பு-2, குமரகுருபரர், சிதம்பர மும்மணிக் கோவை, வித்தியாநு பாலன அச்சகம். சென்னை-1. ஐந்தாம் பதிப்பு-1954-55.
10. அமுதன் கம்பர் காட்டும் வைணவப் பேருலகம் ப.163
11. குறள்-63.
12. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 173

References

AIYYAR V.V.S, KAMBA RAMAYANAM A STUDY, A DELHI TAMIL SANGAM PUBLICATION, First Edition 1950.

அமுதன், கம்பர் காட்டும் வைணவப் பேருலகம், கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17, பதிப்பு-2005.

ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வெளியீடு, மதுரை, முதற் பதிப்பு-1999.

ஞானசம்பந்தன். அ.ச, புதிய கோணம் கட்டுரைகள், பாரி நிலையம் சென்னை -1

முதற்பதிப்பு நவம்பர் 1965.

ஞானசுந்தரத்தரசு அ.அ, கம்பனும் உளவியலும், தமிழ்ச் சோதனைப் பதிப்பகம், புதுக்கோட்டை , முதற்பதிப்பு 2001.

க்ரியா தமிழ் தமிழ் அகராதி. க்ரியா பப்ளிகேஷன்ஸ்.

கமலக்கண்ணன். இரா. வ., உலகப் பெருங் கவிஞர் கம்பர், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1, முதற் பதிப்பு-1988.

குமரகுருபரர், சிதம்பர மும் மணிக் கோவை, வித்தியாநு பாலன அச்சகம், சென்னை-1, ஐந்தாம் பதிப்பு-1954-55.

தமிழண்ணல், கம்ப நாடகம், வானதி பதிப்பகம், சென்னை-17, முதற் பதிப்பு-1995

திருக்குறள் , ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுர ஆதீனம், ஆண்டு1952

மணவாளன். அ.அ , இராமகாதையும் இராமாயணங்களும். தொகுதி - 1,.தென்னக ஆய்வுமையம், சென்னை - 14 முதற்பதிப்பு – 2005.

வையாபுரிப் பிள்ளை, எஸ். பதிப்பாளர். தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. பதிப்பு ஆண்டு. 1958 .

ரம்போலா மாஸ்கரேனஸ், ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஒற்றுமை நிலையம், சென்னை-17, பதிப்பு-1966.